No unauthorized use allowed | www.somasundaram.name | somabhanu@gmail.com | 2014 © Thayumanasamy Somasundaram |

# Flowering Bud School : A Tamil Comedy Drama

மலரும் மொட்டு பள்ளிக்கூடம் - தமிழ் நகைச்சுவை நாடகம் | சிரு ருசி

*இந்த நாடகத்தை கடந்த 2013 வருடம் தமிழ் புது வருடப்பிறப்பின் போது இறைவனடி சேர்ந்த என் பெற்றோர்கள் அ.சோ. தாயுமானசுவாமி பிள்ளை & இராஜலட்சுமி அம்மாள் அவர்களுக்கு சமர்பணிக்கிறேன்.*

**அ.சோ. தாயுமானசுவாமி (1926-2013) தா. இராஜலட்சுமி (1941-2013)**

*This drama is dedicated to the memory of my parents A.S. Thayumanaswamy Pillai and Rajalakshmi Ammal who passed away last year during the week of 2013 Tamil New Year.*

**A.S. Thayumanaswamy (1926-2013) T. Rajalakshmi (1941-2013).**

©2013-14 THAYUMANASAMY SOMASUNDARAM | TALLAHASSEE, FL, USA | SOMABHANU@GMAIL.COM
WWW.SOMASUNDARAM.NAME

April 18, 2014

Authored by: © 2013-14 Thayumanasamy Somasundaram | தாயுமானசாமி சோமசுந்தரம்

# கதா பாத்திரங்கள்

ஆசிரியர்: விவேக்

பரிசோதகர்: சோமசுந்தரம்

மந்திரி:கந்தா

உதவியாளர்: ம்ருத்விகா

தர்ஷிணி; தர்ஷிணி

ராமன்: மாதேஷ்

ரவி: ரோஹித்

அறிவழகன்: கௌஷிக்

நளினா: நளினா

மங்களா: பார்கவி

அல்லி: ஷேவிதா

No unauthorized use allowed | www.somasundaram.name | somabhanu@gmail.com | 2014 © Thayumanasamy Somasundaram |

No unauthorized use allowed | www.somasundaram.name | somabhanu@gmail.com | 2014 © Thayumanasamy Somasundaram |

தமிழ் வருடப் பிறப்பு விழா | டலஹாசி தமிழ் சங்கம்

ஞாயிற்றுக் கிழமை, ஏப்ரல் 20, 2014

தமிழ் நகைச்சுவை நாடகம் - மலரும் மொட்டு பள்ளிக்கூடம்

எழுதியவர்: தாயுமானசாமி சோமசுந்தரம் | தழுவல்: சஞ்சிவ் குமார்

**வடிவம்: கடைசி** (கதா பாத்திரங்களுடன்)

**காட்சி:** 1 | **இடம்:** மலரும் மொட்டு பள்ளிக்கூடம் | **நேரம்:** காலை 9:00 மணி | **நிகழ்விடம்**: 5-ஆம் வகுப்பறை

**பங்கு பெறுவோர்:** வகுப்பு ஆசிரியர் மற்றும் பல மாணவ மாணக்கியர்கள்

*(மாணவர்களும் மாணக்கியர்களும் சத்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வகுப்பு ஆசிரியர் உள்ளே நுழைகிறார்.)*

**வகுப்பு ஆசிரியர்:** அமைதி! அமைதியா இருங்கள்!

**அனைவர்**: (*சேர்ந்து*) வணக்கம்! ஐயா!

**வகுப்பு ஆசிரியர்:** வணக்கம்! வணக்கம்!

*(வகுப்பு ஆசிரியர் உட்காரப் போகிறார். அதற்குள் ஒரு மாணவன் நாற்காலியை நகர்த்தி விடுகிறான்.)*

**வகுப்பு ஆசிரியர்:** அட! என்ன செய்கிறாய்? தலையில் குட்டு போட்டுக் கொள்!

*(மாணவன் தன் தலையில் குட்டு போட்டுக் கொள்ளாமல் ஆசிரியர் தலையில் குட்டு போடப் பார்கிறான்.)*

**வகுப்பு ஆசிரியர்:** என் தலையில் இல்லை! உன் தலையில் குட்டு போட்டுக் கொள்!

**வகுப்பு ஆசிரியர்:** Attendance

| | |
|---|---|
| தர்ஷிணி | இருக்கேன் |
| பார்கவி | ஆஜர் |
| அறிவழகன் | வந்துருக்கேன் |
| நளினா | ஆஜர் |

No unauthorized use allowed | www.somasundaram.name | somabhanu@gmail.com | 2014 © Thayumanasamy Somasundaram |

**காட்சி:** 2

**இடம்:** மலரும் மொட்டு பள்ளிக்கூடம் |

**நேரம்:** மறு நாள் காலை 9:00 மணி |

**நிகழ்விடம்**: 5-ஆம் வகுப்பறை

**பங்கு பெறுவோர்:** பள்ளி பரிசோதகர், வகுப்பு ஆசிரியர் மற்றும் பல மாணவ மாணக்கியர்கள்

*(மாணவர்களும் மாணக்கியர்களும் சத்தமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பள்ளி பரிசோதகர் உள்ளே நுழைகிறார்.)*

**அனைவரும்:** *பரிசோதகர் வருவதைக் கவனிக்காமல் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்.*

**பரிசோதகர்**: மாணவர்களே, அமைதியா இருங்கள்!. அமைதியா அமருங்கள்!

**அனைவரும்:** (*குழப்பத்துடன் பரிசோதகரை பார்த்துக் கொண்டே உட்கார்கிறார்கள்*).

**பரிசோதகர்**: மாணவர்களே, நான் பள்ளி பரிசோதகர். உங்கள் ஆசிரியர் எங்கே?

**மாணவன் 1:** ஐயா, அவர் வர்றார் சார்!

**பரிசோதகர்**: அவர் எங்கே போய் இருக்கிறார் என்று தெரியுமா?

**மாணவன் 1:** ஐயா, தெரியும். தண்ணி அடிக்கப் போயிருக்கார்!

**பரிசோதகர்**: (*ஆச்சர்யத்துடன்*) என்ன? காலை நேரத்திலேயே தண்ணி அடிக்கப் போயிருக்காரா? அட மோசமான வாத்தியாரா இருப்பார் போல இருக்கே!

**மாணவன் 1:** அப்படி எல்லாம் இல்லை! நான் கூட காலை நேரத்தில தண்ணி அடிச்சுட்டுத் தான் வர்றேன்.

**பரிசோதகர்**: என்ன? உனக்கு 10 வயது கூட ஆகல, அதற்குள் தண்ணி அடிக்கப் அரம்பித்து விட்டாயா?

No unauthorized use allowed | www.somasundaram.name | somabhanu@gmail.com | 2014 © Thayumanasamy Somasundaram |

**காட்சி:** 3

**இடம்:** கல்வி இலாகா

**நேரம்:** மறு நாள் காலை 9:00 மணி

**நிகழ்விடம்**: கல்வி மந்திரியின் அலுவலகம்

**பங்கு பெறுவோர்:** பள்ளி பரிசோதகர், கல்வி மந்திரி, மற்றும் கல்வி மந்திரியின் உதவியாளர்

(*கல்வி மந்திரி வெத்திலைப் பாக்கு போட்டு உட்கார்ந்து கொண்டுயிருக்கிறார். அவர் உதவியாளர் உட்கார்ந்து கொண்டே தூங்கிக் கொண்டுயிருக்கிறார். பள்ளி பரிசோதகர் உள்ளே நுழைகிறார்*).

**பரிசோதகர்**: (*உதவியாளாரை மெதுவாக தட்டி எழுப்பிகிறார்*): நான் பள்ளிக்கூட பரிசோதகர், மந்திரிய பார்க்கணும்!

**உதவியாளர்:** (*பயந்து போய் எழுந்து கொண்டே*) மந்திரி ஐயா! கொஞ்சம் அசந்துட்டேன் … …, (*எழுப்புவது வேறு யாரோ என்பதை தெரிந்ததும்*). யோவ், நீ யார்ய்யா, கண்ணை மூடி வேலை செய்றேன்னு தெரியுதுல! ஏன்ய்யா தொந்தரவு செய்கிறாய்?

**பரிசோதகர்**: மந்திரிய கொஞ்சம் அவசரமா பாக்கணும்!

**உதவியாளர்:** யோவ், நீ ஏற்கனவே ஏற்பாடு பண்ணியிருக்காயா? மந்திரி வேலையா இருக்காரு!

**பரிசோதகர்**: நான் பள்ளிக்கூட பரிசோதகர், ஒரு பள்ளிக்கூடத்தைப் பற்றி அவசரமா பேசணும். போய் சொல்லு!

**உதவியாளர்:** (*கொஞ்சம் பயந்து கொண்டே*) அதை முதல்லேயே சொல்ல வேண்டியது தானே!

**பரிசோதகர்**: நான் தான் சொன்னேன்! நீ தூங்கிகிட்டு இருந்ததுல காதுல கேட்கல!

(*உதவியாளரும் பள்ளி பரிசோதகரும் உள்ளே நுழைகிறார்கள்*).